## Paper I

## Tamil Eligibility Test, General Studies, Aptitude and Mental Ability

### Part A - தமிழ் மொழி தகுதித் தேர்வு
### (பத்தாம் வகுப்பு தரம்)

**Code: 503**

**அலகு I: இலக்கணம் (25 கேள்விகள்)**

எழுத்து: பிரித்து எழுதுதல் - சேர்த்து எழுதுதல் - சந்திப்பிழை - குறில், நெடில் வேறுபாடு – லகர, ளகர, ழகர வேறுபாடு - னகர, ணகர வேறுபாடு - ரகர, றகர வேறுபாடு - இனவெழுத்துகள் அறிதல் - சுட்டு எழுத்துகள் – வினா எழுத்துகள் – ஒருமைப் பன்மை அறிதல்.

சொல்: வேர்ச்சொல் அறிதல் – வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் - அயற்சொல் தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் வினைச்சொல் - எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் - இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

**அலகு II: சொல்லகராதி (15 கேள்விகள்)**

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், ஓரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல் - ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்: ஒருபொருள் பன்மொழி - இருபொருள் குறிக்கும் சொற்கள் – பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு - சொல்லும் பொருளும் அறிதல் - ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.

(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் - (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி <u>பயிலுதல்</u> சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) - வானில் <u>முகில்</u> தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்): பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - (எ.கா.) ஊடகம் - தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, <u>தகவல் தொடர்புச் சாதனம்</u>) - சமூகம் - மக்கள் குழு (<u>மக்கள் குழு கூட்டம்</u>): ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக - (எ.கா) புதுச்சேரி – புதுவை, மன்னார்குடி- மன்னை, மயிலாப்பூர் - மயிலை: பிழை திருத்துக (எ.கா) ஒரு - ஓர் பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் - (எ.கா) வெத்தில - வெற்றிலை, நாக்காலி நாற்காலி.

(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் - (எ.கா.) நேத்து மழ பேஞ்சது - நேற்று மழை பெய்தது: சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும், அல்லது, ஆல், பிறகு வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்: அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் – (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அதனால், வரை, பின்பு) - (எ.கா) நான் காட்டிற்குச் சென்றேன். <u>அதனால்</u> புலியைப் பார்த்தேன் -மாலைநேரம் முடியும் <u>வரை</u> விளையாடுவேன். தேர்வு முடிந்த <u>பின்பு</u> சுற்றுலா செல்லலாம்: பொருள் தரும் ஓர் எழுத்து - (எ.கா) ஆ-பசு, ஈ-கொடு, தை-மாதம், தீ-நெருப்பு: பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக - (எ.கா) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம் இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

**அலகு III: எழுதும் திறன் (15 கேள்விகள்)**

(i) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் - தொடர் வகைகள் – செய்வினை, செயப்பாட்டு வினை - தன்வினை, பிறவினை - ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.

(ii) மரபுத் தமிழ்: திணை மரபு – உயர்திணை: அம்மா வந்தது - அம்மா வந்தாள்: அஃறிணை: மாடுகள் நனைந்தது - மாடுகள் நனைந்தன: பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது - அவன் வந்தான்: பெண்பால்: அவள் வந்தது - அவள் வந்தாள்: பலர் பால்: அவர்கள் வந்தார்கள் - அவர்கள் வந்தனர்: ஒன்றன் பால்: அது வந்தன - அது வந்தது: பலவின் பால்: பறவைகள் பறந்தனர் - பறவைகள் பறந்தன: காலம்: நேற்று மழை பெய்யும் - நேற்று மழை பெய்தது: நேற்று வருவேன் - நேற்று வந்தேன்: இளமைப் பெயர்: பசு - கன்று: ஆடு - குட்டி: ஒலிமரபு: நாய் கத்தியது - நாய் குரைத்தது: வினைமரபு: கூடைமுடை, சோறு உண்: தொகை மரபு: மக்கள் கூட்டம் - ஆட்டு மந்தை, நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.

**அலகு IV: கலைச் சொற்கள் (10 கேள்விகள்)**

பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: search engine - தேடு பொறி, வலசை - Migration, ஒவ்வாமை - Allergy, மரபணு - Gene, கடல் மைல் - Nautical Mile).

**அலகு V: வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் (15 கேள்விகள்)**

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் - தலையங்கம் - முகப்புச் செய்திகள் - அரசு சார்ந்த செய்திகள் - கட்டுரைகள் - இவற்றை வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் - உவமைத் தொடரின் பொருளறிதல் - மரபுத் தொடரின் பொருளறிதல் - பழமொழிகள் பொருளறிதல் - ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.

**அலகு VI: எளிய மொழி பெயர்ப்பு (5 கேள்விகள்)**

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் - பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று: pendrive, printer, computer, keyboard) - ஆவணங்களின் தலைப்பு - கோப்புகள் - கடிதங்கள் - மனுக்கள் - மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.

**அலகு VII: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த் தொண்டும் (15 கேள்விகள்)**

திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை - மேற்கோள்கள் - அறநூல் தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) - தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் - உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் - தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜியு போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் - தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்: பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.